## இஸ்லாமியக் காலாச்சாரத்தின் போர்ப் பரிமாணங்கள்

### இஸ்லாத்தில் ஜிஹாத் என்ற சொல்லுக்கான பொருள் மற்றும் அதன் அந்தஸ்து

இஸ்லாத்தில் தடுக்கப்பட்டவை நிகழாமல் பாதுகாப்பதற்காகப் பகைவர்களுக்கு எதிராக ஒரு அணியாய் முயற்சிகளை மேற்கொள்வதற்குப் பெயர் தான் ஜிஹாத் என்பதாகும். எல்லாவற்றிலும் மேலான ஜிஹாத் என்பது ஒருவர் தன்னுடைய இச்சைகளையும் உணர்வுகளையும் கட்டுப்படுத்துவது மற்றும் தன்னுடைய பொருளை அல்லாஹ்வின் வழியில் செலவு செய்வதாகும். ஜிஹாத் என்பது இஸ்லாமிய மார்க்கத்தின் எதிரிகள் ஒரு முஸ்லிம் நாட்டின்மீது படையெடுத்தாலோ அல்லது போர் தொடுத்தாலோ, ஒவ்வொரு அறிவாற்றல் மிக்க, வயது வந்த, ஆரோக்கியமான முஸ்லிம் மீதும் கடமையானதாக ஆகிவிடும். இவ்வாறான நெருக்கடியான நிலை இல்லாதபோது, இவ்வாறு செய்வது கடமையல்ல. முஸ்லிம் படையினர் சிலர் மட்டும் இப்பணியினை மேற்கொண்டால், மற்றவர்மீது எவ்விதக் குற்றமுமில்லை.

இஸ்லாத்தில் ஜிஹாது மிகவும் உயர்ந்த செயலாகும், இதனை அல்லாஹ்வுடனான ஒரு இலாபகரமான வியாபாரம் செய்வதற்கு ஒப்பானதாகக் கூறப்பட்டுள்ளது. அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

يَـٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُواْ هَلْ أَدُلُّكُمْ عَلَىٰ تِجَـٰرَةٍ تُنجِيكُم مِّنْ عَذَابٍ أَلِيمٍ ﴿١٠﴾ تُؤْمِنُونَ بِٱللَّهِ وَرَسُولِهِۦ وَتُجَـٰهِدُونَ فِى سَبِيلِ ٱللَّهِ بِأَمْوَٰلِكُمْ
وَأَنفُسِكُمْ ۚ ذَٰلِكُمْ خَيْرٌ لَّكُمْ إِن كُنتُمْ تَعْلَمُونَ ﴿١١﴾ يَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ وَيُدْخِلْكُمْ جَنَّـٰتٍ تَجْرِى مِن تَحْتِهَا ٱلْأَنْهَـٰرُ وَمَسَـٰكِنَ طَيِّبَةً
فِى جَنَّـٰتِ عَدْنٍ ۚ ذَٰلِكَ ٱلْفَوْزُ ٱلْعَظِيمُ ﴿١٢﴾ وَأُخْرَىٰ تُحِبُّونَهَا ۖ نَصْرٌ مِّنَ ٱللَّهِ وَفَتْحٌ قَرِيبٌ ۗ وَبَشِّرِ ٱلْمُؤْمِنِينَ ﴿١٣﴾

பொருள்: இறைநம்பிக்கை கொண்டவர்களே, துன்புறுத்தும் வேதனையிலிருந்து உங்களைக் காப்பாற்றக்கூடிய வியாரத்தை உங்களுக்கு நான் அறிவித்துத்தரட்டுமா? அல்லாஹ்வின்மீதும் அவனுடைய தூதரின்மீதும் நம்பிக்கை கொள்ளுங்கள். மேலும், அல்லாஹ்வின் வழியில் உங்கள் பொருள்களாலும் உயிர்களாலும் ஜிஹாத் செய்யுங்கள், நீங்கள் அறியக்கூடியவர்களாயிருந்தால், இதுவே, உங்களுக்குச் சிறந்ததாகும். ஆல்லாஹ் உங்கள் பாவங்களை மன்னிப்பான், மேலும், தோட்டங்களில் (சுவர்க்கத்தில்) உங்களை நுழையச்செய்வான், அதன் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும், நிலைத்திருக்கும் சுவனங்களில் மிகச்சிறந்த இல்லங்களையும் உங்களுக்கு வழங்குவான். இதுவே, மகத்தான வெற்றியாகும். மேலும், நீங்கள் விரும்பும் இன்னொன்றையும் உங்களுக்கு நல்குவான், அல்லாஹ்விடமிருந்து கிட்டும் உதவியும் அண்மையிலேயே கிடைக்கவிருக்கும் வெற்றியுமாகும் அது. (நபியே) நம்பிக்கையாளர்களுக்கு இந்த நற்செய்தியை அறிவித்து விடும். (அஸ் ஸஃப்பு:10-13)

www.uzarfalahi.com

இதன் விளக்கங்களை நபித்தோழர்கள் மிகவும் சீரான முறையில் அறிந்த வர்களாகவே இருந்தார்கள். ஒரு நபிமொழியில் கூறப்பட்டுள்ளது, இணைவைப்பாளர்களான எதிரிகள் பத்ரு போரில் முஸ்லிம்களுக்கு மிக அருகிலேயே வந்துவிட்ட நிலையில் இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார் கள்:

**قُومُوا إِلَى جَنَّةٍ عَرْضُهَا السَّمَوَاتُ وَالْأَرْضُ» ، قَالَ: يَقُولُ عُمَيْرُ بْنُ الْحُمَامِ الْأَنْصَارِيُّ: يَا رَسُولَ اللهِ، جَنَّةٌ عَرْضُهَا السَّمَوَاتُ وَالْأَرْضُ؟ قَالَ: «نَعَمْ» ، قَالَ: بَخٍ بَخٍ، فَقَالَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ: «مَا يَحْمِلُكَ عَلَى قَوْلِكَ بَخٍ بَخٍ؟» قَالَ: لَا وَاللهِ يَا رَسُولَ اللهِ، إِلَّا رَجَاءَةَ أَنْ أَكُونَ مِنْ أَهْلِهَا، قَالَ: «فَإِنَّكَ مِنْ أَهْلِهَا» ، فَأَخْرَجَ تَمَرَاتٍ مِنْ قَرَنِهِ، فَجَعَلَ يَأْكُلُ مِنْهُنَّ، ثُمَّ قَالَ: لَئِنْ أَنَا حَيِيتُ حَتَّى آكُلَ تَمَرَاتِي هَذِهِ إِنَّهَا لَحَيَاةٌ طَوِيلَةٌ، قَالَ: فَرَمَى بِمَا كَانَ مَعَهُ مِنَ التَّمْرِ، ثُمَّ قَاتَلَهُمْ حَتَّى قُتِلَ (مسلم، أحمد)**

*பொருள்: வானங்கள் மற்றும் பூமியையும்விட விசாலமான சுவர்க்கத்தில் செல்வதற்காக எழுந்து முற்படுங்கள். ஹஜ்ரத் உமைர் பின் ஹம்மாம் அன் ஸாரி (ர) அவர்கள் கேட்டார்கள்: இறைத்தூதரே ﷺ சுவர்க்கத்தின் அகலம் வானங்கள் மற்றும் பூமியையும்விட விசாலமானதா? இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்: ஆம், அவர் கூறினார், என்ன சிறப்பு! இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்: நீ இவ்வாறு எதனால் கூறுகின்றாய், அவர் கூறி னார், அது ஒன்றுமில்லை, இறைத்தூதர் ﷺ அவர்களே, நானும் சுவர்க்கவாசி களுள் ஒருவனாக இருக்கவேண்டும் என்ற ஆசையினால்தான் இவ்வாறு கூறினேன். அதற்கு இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறினார்கள்: நீர் சுவர்க்க வாசிகளுள் ஒருவர்தான், இதனைக்கேட்ட அவர் தன்னுடைய அம்புக் கவ சத்திலிருந்து பேரீத்தப்பழங்களை எடுத்து அவற்றைச் சாப்பிடத்துவங்கி னார் மற்றும் நான் இந்தப் பேரீத்தப்பழங்களைச் சாப்பிடும் வரையிலும் உயிருடன் இருப்பேனேயானால், அதுவும் ஒரு நீண்ட ஆயுளாகவே இருக் கும் என்று கூறியவாறு தன் கையில் இருந்த பேரீத்தப்பழங்களைக் கீழே எறிந்துவிட்டு இறைமறுப்பாளர்களுடன் போரிட்டுக்கொண்டே உயிர் நீத்து (ஷஹிதாகி)விட்டார். (முஸ்லிம், அஹ்மத்).*

இஸ்லாமிய ஜிஹாதில் மற்றவர்களுடைய உரிமைகள் பறிக்கப்படுவதற்கு எவ்வகையிலும் அனுமதியில்லை. அது கொள்கைகளைச் சார்ந்த விஷய மாக இருந்தாலும், மனிதர்களுடைய வாழ்க்கைகையைச் சார்ந்ததாக இருந் தாலும்சரியே. எந்த ஒரு சாதாரண மனிதருடைய உரிமைகளைப் பறிக் கவோ அழிக்கவோ இடமில்லை. அல்லாஹ்வினால் அருளப்பட்ட மார்க்க வழிமுறைகளைப் பாதுகாத்து அவை அனைத்து மக்களிடமும் சென்றடைய

வேண்டும் என்ற குறிக்கோளுடன் அவற்றை நிலைநாட்டவே ஜிஹாத் மேற்கொள்ளப்படுகின்றது. ஆகவே, அல்லாஹ்வின் இந்தப் போதனைகள் மற்றும் மார்க்கச்சட்டங்கள் உலக மக்களிடம் சென்றடைவதில் தடையாகவோ அதனை எதிர்த்துப் போரிடுபவர்களுக்கு எதிராக மட்டுமே ஜிஹாத் மேற்கொள்ளப்படும். அல்லாஹ் தஆலா கூறுகிறான்:

وَقَٰتِلُوهُمْ حَتَّىٰ لَا تَكُونَ فِتْنَةٌ وَيَكُونَ ٱلدِّينُ لِلَّهِ ۖ فَإِنِ ٱنتَهَوْا۟ فَلَا عُدْوَٰنَ إِلَّا عَلَى ٱلظَّٰلِمِينَ ﴿١٩٣﴾

*பொருள்: ஃபித்னா இல்லாதிருந்து மார்க்கமாகிய தீன் (வாழ்க்கைநெறி) அல்லாஹ்வுக்கே உரித்தானதாகும் வரை நீங்கள் அவர்களோடு தொடர்ந்து போர் புரியுங்கள், ஆனால், அவர்கள் (இத்தகைய ஃபித்னாவிலிருந்து) விலகிக்கொண்டால் அக்கிரமக்காரர்களைத்தவிர வேறு எவரையும் துன்புறுத்துவது அனுமதிக்கப்பட்டதல்ல (அல் பஃகரஹ்:193)*

இதிலிருந்து நாம் தெரிந்துகொள்வது என்னவென்றால் ஜிஹாத் என்பது மார்க்கக்கொள்கைகளைப் பாதுகாப்பதற்காகவே மேற்கொள்ளப்படுகின்றது. எவரும் இதனை எதிர்த்தாலோ அல்லது அதன் வழியில் இடையூறுகளை ஏற்படுத்தித் தங்கள் நாடுகளின்மீதும் புனிதஸ்தலங்களின்மீதும் எதிரிகள் ஆக்கிரமிப்பு மற்றும் படையெடுத்தாலோ இதற்காக முஸ்லிம்கள் அவர்களுடன் போரிடவேண்டும் மற்றும் இவ்வாறான நிலைகளில் அல்லாஹ்வின் புறமான அழைப்பு நிறைவேறவேண்டும் என்பதற்காக அவர்களுடன் ஜிஹாது செய்வது கட்டாயமானதாக ஆகிவிடுகின்றது. இதன்பின் மக்கள் அனைவரும் தம் கொள்கைகளில் சுதந்திரமானவர்கள், அவர்கள் விரும்பினால் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ளலாம் அல்லது தங்களுடைய மார்க்கத்திலேயே நிலைத்திருக்கவும் செய்யலாம். ஏனெனில், இஸ்லாத்தில் எவ்விதக் கட்டாயமும் நிர்ப்பந்தமும் இல்லை.

www.uzairfalahi.com

* * *